பரிசீலனையில் இருந்து வருகிறது. அட்ஹாக் விதிகள் தொகுத்தல் நிலுவையிலிருக்கையில், மூன்று ஆண்டு ஊதிய உயர்வுகள் மணிமுத்தாறு பராமரிப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மணிமுத்தாறு அணைத் திட்டத்தில் பணியாற்றுகிற அந்த ஊழியர்கள் குடியிருக்கும் வீடுகள் கூட இப்பொழுது சேதம் அடைந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக பணியிலிருக்கிற காரணத்தால் சர்வீஸ் கண்டிஷன்ஸ் தொடர்ச்சியாக இருக்குமா? அப்படிப்பட்ட ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே 1962-ல் தற்காலிக இடங்கள் 54 உருவாக்கப்பட்டன. அவைகள் 1971-ல் நிரந்தர இடங்களாக ஒதுக்கப்பட்டன. ஆனால் இன்று வரையில் அந்த இடங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படாதது உண்மையிலேயே சரியானது அல்ல. அந்தக் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும். வீடுகளைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அதிலே என்ன பராமரிப்பு செய்ய வேண்டுமோ அதைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் பதில் அளித்திருக்கிறேன்.

சாத்தனூர் அணைப் பணியாளர்கள்

*817 வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணைப்பகுதியில் தொடர்ந்து சுமார் பத்து ஆண்டு காலமாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிமுறைகளை நிரந்தரப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: என். எம். ஆர். பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது பற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் பகுதியில் தினக் கூலிகளாக வேலை செய்யும் ஆட்கள் கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகளாக தினக்கூலிகளாக பணிபுரிகிறார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்க அரசிடம் ஏதாவது கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு பகுதியில் 85 என். எம். ஆர். கள் பணிபுரிகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற அரசாணையின்படி 12 பேர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டார்கள். மீதி உள்ள 73 பேர்களில் 1-4-1977 முடிய 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் யார் என்ற பட்டியல் கேட்கப்பட்டிருக்கிறது. அது கிடைத்த உடன் அதையும் அரசு ஏற்றுக்கொள்ளும்.

சின்கோனா தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை

*818 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு உணவு - கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறை தொழிலாளர்களுக்கு கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்திக் கொடுக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது?

(இ) உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பண்டங்களை அவர்களுக்கு விநியோகிக்க தற்போது என்ன ஏற்பாடு உள்ளது?

மாண்புமிகு திரு. க. உ. ரா. எட்மண்ட்:-(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) நீலகிரி கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி, மற்றும் உதகமண்டலம் கூட்டுறவுப் பண்டகசாலையினரால் நீலகிரி மாவட்டத்தில் நடத்தப்படும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. நடுவட்டத்திலும், ஏனைய கிராமங்களிலும் இப்பண்டகசாலைகளின் கிளைகள் இருக்கின்றன. சின்கோனாத் துறையின் அலுவலர்களும், தொழிலாளர்களும் இவ்விரு பண்டகசாலைகளின் கிளைகளிலிருந்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர்.

மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை

*819 வினா திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை கூட்டுறவு பண்டகசாலை கலைக்கப்பட காரணம் என்ன?